செய்தி வெளியீடு எண்.112 நாள் 21.02.2017

**திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், சின்ன ஓபலாபுரம் கிராமத்தில் அமைந்துள்ள சென்ச்சுரி பிளைபோர்ட்ஸ் லிமிடெட் தொழிற்சாலை விரிவாக்கத்திட்டத்திற்கான பொதுமக்கள் கருத்துக்கேட்புக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

~~~~~

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், சின்ன ஓபலாபுரம் கிராமத்தில் அமைந்துள்ள சென்ச்சுரி பிளைபோர்ட்ஸ் லிமிடெட் தொழிற்சாலை உத்தேசித்துள்ள பிசின் உற்பத்தி விரிவாக்கத்திட்டத்திற்கான பொதுமக்கள் கருத்துக்கேட்புக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (21.02.2017) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நிறுவனம் விரிவாக்கத்திட்டத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதி மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாறுபாடு அமைச்சகத்திற்கு பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டம் நடத்தி அதில், பொதுமக்களின் கருத்துக்கள் புகைப்படம் மற்றும் வீடியோ ஒளிப்பதிவு திருவள்ளூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் நடத்தப்பட்டது. தனியார் நிறுவனத்தை சார்ந்த அலுவலர்கள் விளக்கவுரை வழங்கினார்கள். தொழிற்சாலை விரிவாக்கம் பற்றியும், அதன் செயல்பாடுகள் குறித்தும் பொதுமக்களுக்கு விரிவாக மின்திரையில் எடுத்துரைக்கப்பட்டது.

பின்னர், சின்ன ஓபலாபுரம் மற்றும் அதை சுற்றியுள்ள கிராமத்தில் பொதுமக்கள் தங்களின் கருத்துக்களை தெரிவித்தனர். அதில் வேலைவாய்ப்புக்கு முன்னுரிமை, சுற்றுப்புற சூழல் மாசுபடாமல் தவிர்த்தல், தண்ணீர் மற்றும் காற்று ஆகியவை மாசுபட்டு சுகாதார சீர்கேடு ஏற்படாமல் தவிர்ப்பது போன்ற கோரிக்கைகளை முன் வைத்தனர். அதற்கு நிறுவனத்தின் சார்பில் பொதுமக்களின் கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு, தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று கூறினர்.

பொதுமக்களின் கருத்துக்களை கேட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கூறியதாவது “நிறுவனத்தின் சார்பாக, அதைச் சுற்றியுள்ள படித்த இளைஞர்கள் மற்றும் இதர பிரிவினருக்கு வேலை வாய்ப்பு வழங்குவது குறித்து முன்னுரிமை அளிக்க வேண்டும். பொதுமக்களின் கருத்துக்கள் அனைத்தும் ஒளிப்பதிவு செய்யப்பட்டு மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாறுபாடு அமைச்சகத்திற்கு அனுப்பி வைத்து உரிய தீர்வுகள் காணப்படும். பொதுமக்களின் கருத்து கேட்பின்போது தங்கள் பொது கோரிக்கைகளான தொகுப்புவீடு, வீட்டுமனை பட்டா, தனிநபர் கழிப்பறை, குடிதண்ணீர் தட்டுப்பாடு, மற்றும் கொசுதொல்லை போன்ற கோரிக்கைகளை மாவட்ட நிர்வாகம் சார்பாக மிக விரைவில் தீர்வு காணப்படும்” என்று மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கூறினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் திரு.கு.பிரகாஷ், கும்மிடிப்பூண்டி வட்டாட்சியர் திரு.ஜவண்ணன் சென்ச்சுரி பிளைபோர்ட்ஸ் லிமிடெட் தொழிற்சாலை உயர் அலுவலர்கள், ஊழியர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~